

தென்மராட்சி வரணி நாவற்காட்டைப்பிறப்பிடமாகவும்
அல்வாய், மோட்டஞ்சீமாவை புகுந்த இடமாகவும் கொண்ட

# அமரர் திரு.வல்லிபுரம் தர்மரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# தர்மதீபம்

## 14.01.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தென்மராட்சி-வரணி,நாவற்காட்டைப்பிறப்பிடமாகவும் அல்வாய், மோட்டஞ்சீமாவை புகுந்தஇடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.வல்லிபுரம் தர்மரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# தர்மதீபம்

**14.01. 2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபதமடைந்த பாசமிகு தந்தையவர்
பாதமதனில்.....

# சமர்ப்பணம்

அன்பின் உருவாய்

எங்கள் குலவிளக்காய்

கண்ணை இமைகாப்பதுபோல்

எமையெல்லாம் காத்து

வையத்துள் வாழ்வாங்கு வாழ


வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்

பாதக் கமலத்தில்

இந்நினைவு மலரைக்


காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இங்ஙனம்,

மனைவி,பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
13 * 07 * 1959

விண்ணில்
15 * 12 * 2010

அமரர்

# வல்லிபுரம் தர்மரத்தினம்

அவர்கள்

## திதி நிர்ணயம்

ஆண்டுதிகழ் விகிர்தியாம் ஆனமதி மார்கழியில்
பூண்ட திதி மாசிலா தசமி வளர்பிறையில் – மாண்புடைய
தண்ணளியான் தர்மரத்தினம் சுவர்க்கம்
நண்ணினனே நம்மை மறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்



## விநாயகர்துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம்கைகூடும்
சென்சொற்பெருவாக்கும் பீடும்
பெருக்கும் உருவாக்கும் ஆதலால்
வானோரும் ஆனைமுகத்தானை
காதலாற் கூப்புவர் தம் கை.

## தேவாரம்

காயமே கோயிலாக கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப்போற்றவிக் காட்டினோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையே
இன்றோர் இடையூறெனக் குண்டோ
எண் தோள் முக்கன் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
யுமை மண வாளனுக்காட்
பாரும்விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்
கீழிருக்க என்றார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிரசச்சிச்சரவண
முத்துக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மக்குச்சுருதியில் முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமுவர்க்கத்தமரரும் அடிபேண.

பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப் பொழுதோடு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாக.

பத்தற்கிரதத்தக் கடவிய பச்சைப்புயன்
மெச்சித்தருபொருள் பட்சத்துடன்
ரட்சித்தருளுவதொரு நாளே.

தித்தித்சயயொக்கப்பரி புர நிர்த்தப்பதம்
வைத்துப்பைரவிதிக்கொக்கனடிக்கக்
கழுதொடுகழுதாட

திக்குப்பரி வட்டக்கலை தொடு
சித்பரப்பவுரிக்குத்திகுதிகு
திக்குத்திகுதிக்குத்திரிகட எனவோத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குரு குக்குக்குரு குத்திப்புடை
புக்குப்பிடியென முது கூகை.


கொட்புற்றெழு நட்புற்றவுணரை
வெட்டிப்பலியிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப்பொறவல
பெருமாளே...பெருமாளே...பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

வீடிருக்கத் தாயிருக்க வேண்டு மனையாளிருக்க
பீடு இருக்க ஊர் இருக்க பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்க கன்றிருக்க வைத்த பொருள் இருக்க
கூடியிருக்கும் நீ போன கோலம் என்ன கோலமே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னை தன்னால் அறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்.

திருச்சிற்றம்பலம்.

## அளக்கும் கருவிகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | கதி | - | கதிமானி |
| (ii) | விசை | - | நியூட்டன் |
| (iii) | விற்றராசு அமுக்கம் | - | பாரமானி |
| (iv) | திரவ அடர்த்தி | - | நீரமானி |
| (v) | வெப்பநிலை | - | வெப்பமானி |
| (vi) | ஆவியுயிர்ப்பு வீதம் | - | உறிஞ்சன் மானி |
| (vii) | இதயத் துடிப்பு | - | உடல் ஒலி பெருக்கி |
| (viii) | அழுத்த வேறுபாடு | - | வோல்ற்று மானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்களின் துதிப்பாடல்

### நாவற்காடு ஞான வைரவர் துதி

நாவற்காடு பதி வாழுமினிய நாயகனாம் ஞானவைரவர்
எல்லையில்லா அடியவர்க்கு ஏற்ற வரமளிக்கும் இறைவா
எம்மன்புத் தெய்வம் தர்மா இவ்வுலக வாழ்வகன்று
உம்மைத்தேடி வந்தார் அபயமளித்தருள்வாய்.

### வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் துதி

பூர்வீக வரலாறு பலவும் கொண்டருளும்
பொற்பதியாம் சிட்டிபுரம் கோவில் கொண்டு
ஆர்வமொடு தொழுது வருமடியார்க் கெல்லாம்
அருள்மாரி பொழிந்தருளும் அற்புதத்தாயே
கார் சுமந்த பூங்கூந்தற் கண்ணகையே
கற்பரசி பொற்பரசி காவலற்கே அன்று
ஓர் நீதி கற்பித்தாய் உன்னை நம்பி
உபயபதம் வந்த எம் அப்பாவிற்கு அபயமளிப்பாய் தாயே.

### அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் துதி

வேப்பிலையின் நாயகியே வேவிலந்தை முத்துமாரி
வினைகளைத்தீர்த்தருள்வாய்......அம்மா....
வினைகளைத் தீர்த்தருள்வாய்
தினம் தோறும் உனைப்போற்றி துதிசெய்யும்
தருமாவை உன் கண்கொண்டு காப்பாயம்மா
வேவிலந்தைத்தாயே (வேப்பிலை)
உனை வலம் வந்து உன்புகழ் கொண்டு
உனைத்துதி செய்தான்தினம் அவன் உன்
பதம் சேர்ந்து விட்டான்
உன்பதம் வந்த தருமாவின் ஆன்மாவை
ஈடேற்றியருள் வாயம்மா வேலிலந்தை தாயே. (வேப்பிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் துதி

செல்வம் பெருகிடச் சீரொடு வாழ்வு சிறந்தளித்தாய்
எல்லாம் பிறக்கு வித்தென ஈங்கு உணர்ந்தாய்
அல்லற்பிறவி அறுத்தெனை உன்னடிக் காத்திடுவாய்
மல்லற் புலன் மாலு சந்தி பிள்ளையாரே.

### மோட்டஞ்சீமா முதலி – அடுப்பு நாச்சியார் துதி

காவல் தெய்வமாய் வீற்றிருந்து கருணை காட்டும்
சீர் மிகு மேட்டஞ்சீமாவில் அருளுறை அடுப்பு நாச்சித்தாயே
வேரொடு வினை களைந்து வெம்பகை வெல்ல வல்லாய்
தாரணி பரமன் தாளில் சேர்ந்திட வரமருள்வாய்.

### வல்லிபுர ஆழ்வார் துதி

பாம்பணைமேல் பள்ளி கொண்ட பரந்தாமா கோபாலா
கண்ணா என்று அழைத்தால் காத்தே கருணை செய்வாய்
மணிவண்ணா என்று அழைத்தால் மனமெல்லாம் நிறைந்திடுவீர்
உடல் மண்ணாகு முன்னே உன் மலரடியில் சேர்த்திடுவீர்.

### செல்வச் சந்நிதி முருகன் துதி

முருகனே தங்கவேல் கைக் கொண்ட மாயோன்மருகனே
ஆறுபடை சந்நிதியில் குடிகொண்டருளும் ஈசன் மகனே
ஒருகை வேலுடன் கூடியிருந்து நாடெல்லாம் வாழ அருள்பவனே
ஒருமையுடன் காலடிக்கீழ் வந்தான் வினை
நீக்கிக் காத்தருள்வாய் முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு வல்லிபுரம் தர்மரத்தினத்தின் வாழ்க்கை வரலாறு

இந்துமா ஆழியின் எழில் முத்தென்ற
வந்த மேனாட்டார் வனப்புடன் சாற்றும்
சுந்தர ஈழமாம் தொல் பெருநாட்டின்
சிரமென மிளிரும் செந்தமிழ் யாழ்நகர்
வரமுறு யாழ்நகர் மருவிய பதிகளுள்
கன்னலும் கதலியும் கவின் பெறுசாலியும்
மன்னிய தெங்கொடு வான்பலாமாவும்
ஐங்கரத்தண்ணல் அருள் மொழி கோட்டமும்
செங்கையில் வேலுடைச் சேயோன் கோயிலும்
சென்று மாமதுரை தீக்கிரையாக்கிய
கண்ணகியம்மன் கவின் பெறாலயம்
துன்னிய பேரூர் துகடீர் மூதூர்
நாடா வளம்பல நாடி வந்தடையும்
செல்வ பதியாம் சிறப்புற வரணியில்
கிழக்கில் அமைந்த நாவற்காட்டில்
பொருவரு தவத்தின் புண்ணிய வடிவம்
கருவிலே திருவாய்க் கவினுற அமைந்த
அற்புதப் பிறவி தர்மரத்தினா
உருவும் திருவும் ஒப்பரும் பண்பும்
தன்பாற் கொண்ட தான் செய்தவத்தால்
அன்பும் அடக்கமும் அருளும் பொறுமையும்
இன்சொல்லும் வாய்மையும் இயல்பாயமைந்த
சாந்த சொரூபம் உண்மையின் வடிவம்
நம்பினோர்க் கெல்லாம் நல்உதவி புரியும் தூயநெஞ்சினன்
துன்னரும் சுற்றம் சிறப்புடன் வாழ
பன்னரும் பணிகள் பற்பல புரிந்தும்
வையகமதனில் வாழ்வாங்கு வாழ்ந்த
அணையா மணி விளக்கணைந்தது ஏனோ?
அப்பெரும் பதிவரு ஆன்ற தொல்குடி
மேழிக் கொடியுடை வேளான் மரபில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வந்தவதரித்த மாசிலாத் தூயோன்
திருநிறைச் செல்வன் வல்லிபுரம்
இன்னருட் செல்வி பரிபூரணமும்
இல்லறம் நடாத்தி இனிதுறு
வாழும் காலை புண்ணிய தவத்தால்
ஐந்தாம் மகனாய்
தர்மரத்தினம் எனும் நாமம் கொண்ட
நற்பெரு ஆசான் அவனியில் தோன்றினன்
மண் விளையாடி மழலை பேசி
பள்ளிப் பருவம் பாங்குடன் அணுக
வரணிப் பதியில் சிரமென மிளிரும்
வரணி மகா வித்தியாலயத்தில்
கல்வியைப் பாங்குடன் கற்று
மாணவப் பருவம் இனிதே முடிந்தனரே
இல்லறம் தன்னை இயைபுடன் நடாத்த
வதுத்த பாலசோதியெனும் மாண்புடைச் செல்வியை
வாழ்க்கைத் துணையாய்ப் பெற்று
இல்லறம் என்னும் நல்லறத்தை இங்கிதமாக
இனிதுற நடாத்தி வாழும் போதில்
சாயினி யெனும் அரும்பெரு புதல்வியும்
அன்புடை மகவாய் ஜனார்த்தனனும்
அவனியில் தோன்றினர்.
கூடிக்குலாவ இன்புற்று மகிழ
சோதரராய் சேர்ந்து வாழ
இராசரத்தினம் செல்வரத்தினம்
வனப்புடன் சாற்றும் பிரான்சில்
வளமுடன் வாழும் இலட்சுமியம்மா
ஆசான் சேவை அழகுற ஆற்றும்
கனகரத்தினம் அவருடன் கூடவே நவரத்தினம்
செம்மை வாழ்வு சீருடன் துலங்கும்
பிரான்ஸ்சுப் பதியில் தவரத்தினம் பாலரத்தினம்
இவ்வுலகில் உடன் பிறந்தனரே
இறையவன் அருளால் இவ்வுலகு சிறக்க
ஆசிரியப் பணி குடமியன் ஊரில் அ.த.க பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பலரும் பயன் பெற்றிடவே
அயலார் போற்றிட பல வருடங்கள்
அரும்பணி புரிந்தனனே
வதுவை அல்வாய்ப் பதியில்
வாழும் போதில்
தம்பசிட்டி தமிழ் கலவன் பாடசாலையில்
தர்மாவின் சேவை யாவரும் வியக்க
தொடர்ந்தது தொடர்ந்ததுவே
காலனவன் கண் இமைப் பொழுதில்
யாவரும் அறியாத இனிய பொழுதில் கவர்ந்தனனே
இல்லறம் எனும் நல்லறம் தன்னை
பல்லரும் சிறப்புடன் மாண்புடனாற்றிட
ஒப்பரும் இல்லான் உலகினை விடுத்து
விண்ணகம் சென்ற மிக துயராலே
செய்வதறியாது திகைத்த மனைவி மக்கள்
உள்ளம் சோர உணர்வு தடுமாறி
எண்ணருங் கலமே எங்கே சென்றாய்
மனைக்கு விளக்காய் மாண்பொழி வீசிய
அணையாச் சோதி அணைந்தது ஏனோ
கோடையிலாறும் குளிர் நிழலெங்கே?
வாசலிலோடிய மணித்தேர் எங்கே
துன்பம் யாவையும் தானே சுமந்து
இன்பம் யாவும் எமக்கே யளித்த
கற்பக தருவே பொற்பின் சுடரே
மண்ணகம் விடுத்து ஏனோ மறைந்தாய்.

--குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவால் துயருறும் உறவுகளின் சோகம்

## அன்பு மனைவியின் மனத்துயர்

விண்இடிந்து வீழ்ந்ததுவோ! விரி தென்றல்
ஒய்ந்ததுவோ! வானத்து நிலவொன்று
வாழ்வழிந்துபோனதுவோ! கண்ணில்லா
காலனவன் கருணையின்றி எடுத்தானோ!
கண்மணிகள் தவிக்குதய்யா! கண்திறந்து
பாரும்மைய்யா! உன்னுடைய கிளைகள்
இன்று உறவின்றிப்புலம்புதய்யா!
உத்தமனே ஒரு வார்த்தை வாய்திறந்து
பேசுமைய்யா! வான்மதியே
சந்திரனே சடுதியில் மறைந்ததேனோ
வாடுகிறோம் தேடுகிறோம் நெடுந்தூரம் சென்றதேனோ!

## மகளின் சோகம்

அன்புடனே அருளினையும் அகத்தில் கொண்டாய்
தயவுடனே பரிவு பாசம் கொண்ட சீலன்
இன்னுரையால் மனங்கவரும் மாட்சி மிக்காய்
இரு பொரும் இறைவனையே போற்றும் பக்தி
தன்னிகரே இல்லாத எங்கள் அப்பா
சடுதியிலே எமை விட்டுப் போன தேனோ
பொன்னுலகப் பேற்றினிலே அமைதி கொள்வாய்
போதரவாய்ப் பெற்ற கடனாற்றுகின்றோம்.

## மகனின் மனத்துயர்

சீலமுறு கலை புகட்டி குலமுறைசேர் மரபுகளை
சாற்றி எமை வளர்த்த தந்தையே தவமுதலே
காலமெனும் சக்கரத்தில் அச்சாணியென இருந்து
எமையெல்லாம் வாழவைத்த உத்தமனே எங்குற்றாய்
வேலவனின் வடிவோனே! வெந்துயரம் உறுத்து தெம்மை
குலவிருட்சம் தாங்கி நின்ற பெருவிழுதே அப்பா நீ.
நீல கண்டன் சேவடியில் நித்தியமாயச் சாந்தி பெற
நூலுரைக்கும் வழிநின்று குவலயத்தில் கடன் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் மனத்துயர்

முந்தித் தவங்கிடந்தேன்
முழுமுதலை நான் தொழுது
வந்தித்த பேறாக வந்துதித்த என் மகனே
அந்திக் கடன் செய்வாய்
எந்தனுக்கு என்றிருந்தேன்
நந்தி பதம் சென்று விட்டாய்
என்கடன் செய்வது யார்.

## மூத்த சகோதரர்கள் மனவேதனை

தர்மத்தின் பொக்கிஷமே தம்பிரத்தினமே
தாங்கமுடியவில்லையடா உன் சாவை எம் நெஞ்சத்தில்
காலனவன் உன் கழுத்தில் கயிறொன்றைப்
போட்டதனால் பாசத்தை இழந்து இங்கு பரிதவித்து நிற்கிறோம்
நேசமுடன் நாம் பழகிய நாட்கள்
நெஞ்சத்தில் நிற்கின்றதே பாவியர்கள்
ஆகிவிட்டோம் பாரினில் நாம் இனி எதற்கு
ஆசானே உனது ஆற்றல் அறிவு
என்றும் அழியாது பொய் உடம்பு
அழிந்தாலும் புகழ் உடம்பு அழியாதய்யா.

## இளைய சகோதரர் மனவேதனை

ஏற்றம் எமக்களித்து எம் உயர்விலே
மகிழ்ச்சி கொண்டாய் அண்ணாவே
கூற்றம் உனக்கிழைத்த கொடுமைதனை
எண்ணி அழுகின்றோம் அலைகின்றோம்
முற்றத்தில் வருவதற்கு வழியின்றி
முகம் காண துடிக்கின்றோம் நாம் இங்கு
சீற்றம் எமக்கு உண்டு எம் விதியை
நொந்து இனி எப்போது காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமக்கள் மருமக்கள் மனத்துயர்

மனம் வாக்கு கோணாத பெருந்தகையே
வாண்மையிலே சிறந்து நின்ற கரங்களன்றோ
தனவானாய் மண்ணுலகம் போற்ற வாழ்ந்த
தடந்தோளான் தண்ணளியும் நீயும் எங்கே
இனமான குலப்பெருமை உடமைக்கி
இருஞ்சுகங்கள் பெற்றவனே உந்தனது
கனவான பெருந்தவமும் கானலாச்சோ
கண்ணீரும் கவலையுமே மிச்சமாச்சோ

## மைத்துனன் மைத்துனி மனத்துயர்

வஞ்ச மறியாதவராய் வாழ்ந்த மேலோன்
வசையறியாத தூயநெறி அறிந்த எங்கள்
தஞ்சமெனும் மைத்துணரே தவத்தின் குறையோ
தரணியுள்ளோர் துயர் சுமக்க எங்கு சென்றாய்
நெஞ்சகலா பக்தியினைக் கொண்டபேறால்
விண்ணுலகம் எய்தினியோ இயம்புவாயோ
கஞ்சமலர் முகங்காண சுற்றம் தவிக்குதய்யா
துய்யவனாய் ஐயன் அடிசேரக் கடவீர்

## உடன்பிறவாத சகோதர சகோதரிகள் மனவேதனை

உடன் பிறவாச் சகோதரனாய் உலகில் நீயிருந்த போதும்
உடன் பிறந்த எம்மவன் போல் என்றும் யாம் எண்ணிடவே
இனிய நல் உதவிதனை எங்களுக்கு நீ செய்தாய்
இடையினில் பிரிந்ததனால் இடருற்றோம் சகோதரனே
பாசத்தோடு இன்முகம் காட்டி வாவென்று அழைப்பீர்
நேசத்தோடு எம்குறை கேட்கும் திருமுகத்தை காண்பதெப்போ
தேசம் கடந்து சென்ற செய்தி கேட்டு துடித்துப் போனோம்
வாசமலர் வீசும் இறைவன் திருப்பாதம் சென்றனையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர், அயலவர் நண்பர்கள் இதயக்குமுறல்

தார்வேந்தன் போலிருந்து சந்ததியை ஆண்டவனே
செல்வ பதியாயிருந்து கொடை வழங்கும் கொற்றவனே
ஊர் நடுவில் பழுத்த நல்ல மரமாயிருந்தாய்
கால் பதித்த இடமெல்லாம் வாசமல்லி பூக்குமையா
வேர்விட்ட உன்மரபு நின்கதையைச் சொல்லு மென்றும்
பூதலத்தில் உள்ளவர்க்கு தத்துவங்கள் நீ உரைத்து
பேர் நீங்கி பேழையிலே வித்தகனே உறங்குகின்றாய்
பார் போற்றும் பரமனடி பேறடைய போற்று கின்றோம்.

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தே-வேண்ட
நமக்கு மதுவழியே நாம் போமளவும்
எமக்கென்ன என்றிட் டிரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி தவறாது வாழ்ந்த அமரர் தர்மரத்தினம்

முப்பத்தாறு வருடங்களாக என்னுடன் நெருங்கிப்பழகிய அன்பும் பணிவும் கொண்ட மாணவனை இழந்த துக்கம் நெஞ்சை அடைக்கின்றது. மாணவனாகப் படித்தகாலத்தில் ஏற்பட்ட அன்பும் பணிவும் இறுதிவரை நிலைத்திருந்தது. படிக்கின்ற காலத்திலேயே மற்றவர்களுக்கு உதவுவது எல்லோருடனும் இன்சொல் பேசுவது ஆகிய உயர் குணங்கள் உயர் கல்வி பெற்று ஆசிரியராகி வசதியான திறமான வாழ்க்கை அமையப்பெற்ற போது எவ்வித மாற்றமும் இன்றி தர்மரத்தினத்திடம் நிலைத்திருந்ததைக் கண்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்திருக்கின்றேன். அண்ணை என்று என்னை அழைக்கின்றபோது அதில் உள்ள அன்பையும் பாசத்தையும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

தர்மரத்தினம் சிறந்த ஆசிரியர் மாணவர்களிடத்தே ஒழுக்க நெறிகளைப் போதித்து நடுநிலை தவறாது மற்றையவர்களுக்கு வழிகாட்டியாக செயற்படுபவர் என்று அதிபர் ஆசிரியர்கள் என்னுடன் கதைக்கும்போது சைவநெறி வழுவாது தழுகின்ற வரணிக்கிராமத்தின் அடிப்படை இயல்பு என்று கூறி நானும் மகிழ்ச்சியடைவதுண்டு. வடமராட்சியை வாழ்விடமாக கொண்டு வடமராட்சி கல்விப் புலத்திலே இருவரும் பணியாற்றியதனால் எமக்கிடையே உள்ள தொடர்பு இறுதிவரை மிக நெருக்கமாகவே இருந்தது. ஆசிரியப்பணி மட்டுமன்றி சமய சமூகபணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதனால் கல்விச் சமூகத்தில் மட்டுமன்றி அல்வாய் கிராமமக்கள் மத்தியிலும் தர்மரத்தினத்திற்கு பெருமதிப்பு இருந்தது. திருமணத் தொடர்பை ஏற்படுத்தி எமது குடும்பத்தவர்களுக்கும் அல்வாய்க் கிராமத்திற்கும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திவைத்தவர் அமரர் தர்மரத்தினம்.

பெற்றோருக்கு நல்ல பிள்ளையாகவும் ஆசிரியர்களுக்கு நல்ல மாணவனாகவும் மாணவர்களுக்கு நல்ல ஆசிரியராகவும் மனைவுக்கு உத்தம கணவராகவும் பிள்ளைகளுக்கு பெருமை மிக்க தந்தையாகவும் ஊரவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய தர்மரத்தினம் 51 வயதில் இவ்வுலக வாழ்வை முடித்து வானுலகு சென்றமை எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகவே உள்ளது. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற மாற்ற முடியாத இயல்பை கொண்டதுதான் இவ்வுலக வாழ்க்கை. என்னதான் அறிவு வளர்ச்சியடைந்தாலும் இந்த நியதியை யாராலும் மாற்ற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்கள் செய்த தவம் பிள்ளைகளைச் சாரும் என்பார்கள் அமரர் தர்மரத்தினம் செய்த அறத்தின் பயன் அவர்களது பிள்ளைகளைச் சார்ந்து அவர்களுக்கு மனத்தையிரியத்தை கொடுத்து அவர்களுக்கு வழிகாட்டியாக நிச்சயமாக அமையும். குடும்பத்தலைவரை இழந்து தவிக்கின்ற மனைவி பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களின் பெருந்துயரில் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.க. அம்பலவாணர்
ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி
கரவெட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் நிறைந்த தர்மா!!...

நிரந்தரமில்லாத எமது வாழ்வில் எத்தனையோ மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். அதில் சிலரை ஞாபகபடுத்தக்கூட முடிவதில்லை. சிலர் ஞாபகபடுத்தினால் மட்டும் ஞாபத்தில் வருவார்கள். ஆனால் சிலரின் ஞாபகம் உள்ளளவும் எம்மால் மறக்கமுடியாதபடி அமைந்துவிடுகிறது. திரு.வல்லிபுரம் தர்மரத்தினம் அவர்களும் இப்படிப்பட்டவர்களில் அடங்கும் ஒரு மகாமனிதன்.

கடந்த மூன்றுவருடங்களில் அவர் என்னோடு இணைந்து என்பணியில் என்னோடுதோள் கொடுத்த விதம் எண்ணும் போது வியப்பையும் வேதனையும் தரும் நிகழ்வாகும். அவரைப் பிரிந்த துயரம் இன்றுவரை இதயத்தை பிழிந்து கொண்டிருக்கிறது.

எந்த நிகழ்விலும் எந்தநேரத்திலும் என்னருகே என்னோடு துணைநின்று அவர் செய்த பணிகளை மறக்கமுடியாது. எந்த விடயங்களையும் நான் சென்னபிறகு தான் செய்வது என்பதன்றி குறிப்பறிந்து செய்வதில் தர்மாவுக்கு நிகர் தர்மாதான்.

எத்தனை நெருக்கீடுகளையும் அவர் அணுகும் விதமும் அவற்றை செய்து முடிக்கும் சீர்மையும் திறமையும் எந்த ஒருவிடயத்தையும் இழுத்துப் போட்டுச் செய்வதில் அவர் காட்டும் ஈடுபாடும் வியப்புக்குரியது.

ஒடிசலான சற்றே உயரமான தோற்றமும் சாந்தமான முகமும் அதற்கேற்ற இனிமையான பேச்சும் எத்தனை இங்கிதமான ஒருமனிதர்!! அவர் இல்லை என்பதை இன்றுவரை ஜீரணிக்கமுடியாது தவித்துக் கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன்.

இந்த மூன்று வருடங்களில் ஏன்? அவரது இறுதிநாள் கூட என்னோடு இணைந்திருந்த அதிசய மனிதரை அக்கினியில் போட்டுவிட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறோம். நான் அடிக்கடி சொல்வதுண்டு எனக்கு ஓர் அருச்சுனன் அவர் என்று அத்தனை ஈடுபாடும் விருப்பமுமாய் ஒருவனை நேசித்தேன் என்றால் அது என் தர்மாதான்.

இங்கிவனை நான்பெறவே என்னதவம் செய்துவிட்டேன் என்று பாடிய பாரதிக்கு வாய்த்த கண்ணனாய் எனக்கு வாய்த்த தர்மா உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை அனுதினம் பிரார்த்திக்கிறேன்.

திரு.கா.ராமஜெயம் M.A(அதிபர்)
யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna District- Important Telephone Numbers

## (யாழ் மாவட்டத்திலுள்ள முக்கிய தொலைபேசி எண்கள்)

### Hospital வைத்தியசாலைகள்

| Name | Phone Numbers |
|---|---|
| 1. Base Hospital Manthikai | 021-2263261 |
| 2. Cancer Hospital Thellipalai | 021-2228478 |
| 3.Central Nursing Home | 021-2222263 |
| 4. Chest Clinic | 021- 2222494 |
| 5. Co-oprative Hospital Society | 021-2226474 |
| 6. Director Teaching Hospital Jaffna | 021- 2223348 |
| | 021-2227764 |
| 7. District Hospital Chavakachcheri | 021-2228479 |
| 8. District Hospital Chankannai | 021-3216574 |
| 9. District Hospital Karainagar | 021-3216573 |
| 10. District Hospital Delft | 021-3213577 |
| 11.District Hospital Kayts | 021-3212660 |
| 12. District Hospital Kopay | 021-3229970 |
| 13. District Hospital Valvettithurai | 021-3212661 |
| 14. District Hospital Thellipalai | 021-3212614 |
| 15. General Hospital Jaffna | 021-3222260 |
| 16. Green Memorial Hospital Manipay | 021-2222747 |
| 17. Holy Cross Health Cetre | 021-2229639 |
| 18. Holy Cross Mother Center | 021-2222512 |
| 19.Mental Health Society. Thellipalai | 021-2229853 |
| 20. MOH,Mallagam | 021-3216040 |
| 21. MOH, Achchuvely | 021-3216037 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 22. MoolaiCo-operative Hospital | 021-3226474 |
| 23. Nurses Training Center | 021-2222736 |
| 24. Vetrinary Hospital | 021-2222342 |

## D.S Office-பிரதேசசெயலகங்கள்

| Name | Phone Numbers |
|---|---|
| 1.Kachcheri | 021-2222209 |
| 2.Chankani | 021-2223954,060-2216003 |
| 3.Chavakachcheri | 021-2226171, 060-2216009 |
| 4.Jaffna | 021-2222209, 021-2227536 |
| 5.Karainagar | 021-2226090, 060-2214389 |
| 6.Kayts | 021-2223955, 060-2214955 |
| 7.Kopay | 021-2224044, 060-2216421 |
| 8.Maruthankerny | 021-3214851 |
| 9.Nallur | 021-2222208,060-2214167 |
| 10.Pallai | 021-3212290 |

## Jaffna Kachcheri-மாவட்டச் செயலகங்கள்

| Name | Phone Numbers |
|---|---|
| 1.Accountant | 021-2222771 |
| 2.Add.G..A | 021-2222236 |
| 3.Asst.Commissioner of Motor Traffic | 021-2223789 |
| 4.Chief Accountant | 021-2222398 |
| 5.Election Office | 021-2222655 |
| 6.GA | 021-2222235 |
| 7.Hindu Religious Affairs | 021-2225613 |
| 8.Land Registry | 021-2222475 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 9.Media Centre | 021-2223767 |
| 10.Ministry Of Hindu Affairs | 021-2225613 |
| 11.Necord | 021-2225163 |
| 12.Neiap | 021-2225068 |
| 13.Project Director | 021-2222774 |
| 14.Pd Kondavil Food Stores | 021-2214772 |
| 15.Registration Of Persons Dept | 021-2225052 |
| 16.UNHCR Micro Project | 021-2225593 |
| 17.World Food Programme | 021-2229716 |
| 18.Planning Section | 021-2222427 |

## Post Office-அஞ்சல் அலுவலகங்கள்

| Name | Phone Numbers |
|---|---|
| 1.Chankanai Post Office | 021-2227523 |
| 2.Chavakachcheri | 021-2227062 |
| 3.Deputy Post Mastr General | 021-2227136 |
| 4.Divi Supt Of Post Office | 021-2222256 |
| 5.Karainagar Post Office | 021-2227089 |
| 6.Kopay Post Office | 021-2226978 |
| 7.Post Office Pointpedro | 021-2263250 |
| 8.Pandatheruppu Post Office | 021-2227570 |
| 9.Post Office Chunnakam | 021-2213169 |
| 10.Post office Karaveddy | 021-2263252 |
| 11.Post office Of Analaithvu | 021-2262346 |
| 12.Chundikuli | 021-2212550 |
| 13.Eluvathivu | 021-2212347 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 14.Jaffina | 021-2222250 |
| 15.Karanavai | 021-2263009 |
| 16.Kayst | 021-2222500 |
| 17.Kodikamam | 021-2264058 |
| 18.Kokuvil | 021-2225015 |
| 19.Manipay | 021-2222650 |
| 20.ManthiKai | 021-2263251 |
| 21.Nainativu | 021-2212345 |
| 22.Urmpurai | 021-2222447 |
| 23.Vannarpannai | 021-2225017 |
| 24.Velanai | 021-2222533 |
| 25.VVT | 021-2213098 |
| 26.Kaithady | 021-2222402 |
| 27.Thallipalai | 021-2227532 |
| 28.Vaddukoddai | 021-2227426 |

*****

***

*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 15 |
| 07 | 12 |
| 1959 | 2010 |

அமரர்

## திரு.வல்லிபுரம் தர்மரத்தினம்

[illegible]

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தில்லையம்பலப்பிள்ளையார்,
அல்வாய் கிழக்கு.

# கண்ணீர் காணிக்கை



மறைவு 15.12.2010

திரு வல்லிபுரம் தர்மரத்தினம்

(ஆசிரியர் யா/தும்பளை சிட்டி.மெ.மி.த.க. பாடசாலை)

காற்றோடு வந்த செதிகேட்டு
கதிகலங்கி நிற்கிறோம் நாம்
உம் குடும்பத்தினர் அனைவரையும்
தவிக்கவிட்டு எங்குதான் சென்றீரோ
உமது மனைவி கதறியழ
உமது பிள்ளைச் செல்வங்கள் அனைவரையும்
விட்டு விண்ணகை வாழ்வுக்கு சென்றுவிட்டீரோ
எப்போது உம்மை காண்போம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சாமி கல்விநிலையம்

திருஞானராஜா ஆசிரியரும்
2011 ( A/L. )பயிலும்
மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
13.07.1959

மறைவு
15.12.2010

## அமரர் வல்லிபுரம் தர்மரத்தினம்

(ஆசிரியர், யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, பகுதித்துறை)

[illegible]

உங்கள் பிரிவால் வாடும்
யா தர மாணவ மாணவிகள்
*Maths Center*
ஏளன்னியடி.

# ...ணீர் காணிக்கை



மறைவு 15.12.2010

திரு வல்லிபுரம் தர்மரத்தினம்
(ஆசிரியர் யா/தம்பசிட்டி.மெ.மி.த.க. பாடசாலை)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
உறைவிடமாய் வாழ்ந்தவரே
எங்கு சென்றீர் தேடுகின்றோம்
நீங்கள் வாழ்ந்த இடமெல்லாம்
இன்று சிந்துகிறது கண்ணீர்த்துளிகள்
கனவாகிப் போன இந் நாளில்
கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எம் ஆருயிர் தோழி த.சாயினி அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

2011 ( A/L ) மாணவர்கள்
**Maths centre**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

13 ✤ 07 ✤ 1959



மறைவு

15 ✤ 12 ✤ 2010

அமரர்

## திரு. வல்லிபுரம் தர்மரத்தினம்

ஈரமனமும் இரக்க சிந்தனையும்
கடமையும் கண்ணியமும்
களங்கமில்லா செயல்திறனும்
பண்புநிறை பழக்கமும்
பல்திறனும் கொண்டு எங்கள்
மனம் நிறைந்த பண்பாளன்
சைவத்தை வளர்த்துதவ
தன்சேவை தனைமிந்தோன்
விழிகலங்கி வேதனையில் உயல் பதற
எம்மை விட்டு
காற்றோடு காற்றாக
கலந்து விட்டீர்...... ஐயகோ !!!
தேற்றுவார் யாருளரோ!!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
நம்பசிட்டி வெ.மி.த.க.பாடசாலை.

# கண்ணீர் காணிக்கை

மண்ணவரில்

13 / 07 / 1959



விண்ணவரில்

15 / 12 / 2010

## அமரர் வல்லிபுரம் தர்மரத்தினம்

(ஆசிரியர். யா/தம்பசிட்டி வெ. மி. த. க. பாடசாலை. பருத்தித்துறை)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சாந்தி சாந்தி சாந்தி

[illegible]

கண்ணீர்த்துளிகளுடன், உயர் துயரால் துவளும்
அதிபர் - கா.ராமலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சொரியும் விடைதருகின்றோம்



மண்ணகம்
13-07-1959

விண்ணகம்
15-12-2010

## திரு.வல்லிபுரம் தர்மரத்தினம்

(ஆசிரியர் யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை)

சிரித்த முகமும் சிவந்த மேனியும்
எளிமையான பேச்சும் கனிவான மனமும்
கல்விக் கடலில் கலங்கரை விளக்கமாய்
எமை விட்டுப்பிரிவதை காண்பதெப்போது?


[illegible]
[illegible]
காலமெனும் பதித்திருந்த செய்தி காதையும் கேட்டபோது
செய்வதறியாது நின்று புலம்புகின்றோம்.

தங்கள் சேதி கேட்டு துவண்டிருக்கின்ற மாணவ மணிகள்
மற்றும் ஆசிரியரும் உற்றார் உறவினர்கள்
துன்பத்தில் நாமும் கலந்து அஞ்சலியில்
ஆத்மா இறைபதம் சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


தரம் - 09 மாணவர்கள்
யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை

## சைகை விளக்கின் மூலம் வாகனத்தை செயற்படுத்தல்




1) சிவப்பு நிறம்– நில்

சைகை விளக்கில் சிவப்பு நிறம் காட்டினால் நிறுத்தும் கோட்டின் பின்னே நிறுத்தவேண்டும்.




2)சிவப்பும் மஞ்சள் நிறம்–செல்வதற்கு தயாராக சிவப்பு விளக்கு எரியும் போது மஞ்சல் விளக்கு எரியதொடங்கினால் பச்சை விளக்கு எரிவதற்கு அண்மித்துள்ளது என்பதாகும் ஆகையால் செல்வதற்கு தயாராக வேண்டும். (முன்னுக்குச் செல்லக் கூடாது)



3)பச்சை நிறம்–செல்

பச்சை விளக்கிற்கு முகங்காட்டி நிற்கும் வாகனங்கள் நேரே முன் செல்ல முடியும் பாதுகாப்புள்ளதெனில் இடப்பக்கவோ வலப்பக்கவோ செல்லமுடியும்.




4) மஞ்சல் நிறம்– நில்

சிவப்பு நிற வெளிச்சம் எரிவதற்கு மிகவும் குறுகிய நேரமே இருக்கிறது நில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5) சிவப்புநிறமும் பச்சை அம்புக்குறி–

சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறியின் அடையாளமும் பச்சை நிற அம்புகாட்டும் திசையால் மட்டும் ஓட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதே.



6) விட்டு விட்டு எரியும் மஞ்சள் சமிக்ஞை–

விட்டு விட்டு எரியும் மஞ்சள் சமிக்ஞையில் அறிவிப்பதாவது சமிக்ஞை விளக்கு மூலமோ பொலிஸ் சமிக்ஞை மூலமோ செயற்படவில்லை என்பதே அப்படியெனில் சாதாரணமாக சந்திகளில் நடைமுறைப் படுத்தப்படும். வீதிச் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும். (2–4) சம்மந்தமானது



7) விட்டு விட்டு எரியும் சிவப்பு நிற சமிக்ஞை:–


அதில் அறிவுறுத்தப்படுவது புகையிரதக் குறுக்குப் பாதை தீயணைப்பு மத்தியஸ்தானம் ஆகியன அவ்வித இடங்களில் வாகனத்தை நிறுத்தி இடமளிக்க வேண்டும். (இச் சைகைகளுக்கு கட்டாயமாக அடிபணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அபாய எச்சரிக்கை சைகைகள்


1


2


3


| | | |
|---|---|---|
| முன்னால் குறுக்கு வீதிகள் | முதலாவது பக்கப்பாதை இடது பக்கமாக அடுத்தடுத்து வரும் சந்தி முன்னால் | முதலாவது பக்கப் பாதை வலது பக்கமாக அடுத்தடுத்து வரும் சந்தி முன்னால் |



4


5


6

| | | |
|---|---|---|
| T உரு கொண்ட சந்தி முன்னால் | Y உரு கொண்ட சந்தி முன்னால் | இடமிருந்து வரும் வாகனம் பிரதான பாதையில் இணையும் சந்தி முன்னால் |


7


8


9

| | | |
|---|---|---|
| வலமிருந்து வரும் வாகனம் பிரதான பாதையில் இணையும் சந்தி முன்னால் | குறுகிய பாலம் ஒன்று முன்னால் | இடது பக்க வளைவு முன்னாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


10


11


12

| 10 | 11 | 12 |
| --- | --- | --- |
| வலது பக்க வளைவு முன்னால் | இடது பக்கமாக இரட்டை வளைவு முன்னால் | இடது பக்கமாக இரட்டை வளைவு முன்னால் |


13


14


15

| 13 | 14 | 15 |
| --- | --- | --- |
| முன்னால் வலது பக்கத்துக்கு கொண்டை ஊசி வளைவு | முன்னால் இடது பக்கத்துக்கு கொண்டை ஊசி வளைவு | முன்னால் இரட்டை வாகனப் பாதையின் முடிவு |


16


17


18

| 16 | 17 | 18 |
| --- | --- | --- |
| முன்னால் பாதை ஒடுங்குகிறது | முன்னால் பாதுகாப்புடைய புகையிரதக்கடவை | பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19

முன்னால் பஸ்வண்டி
ஒழுங்கை



20

முன்னால் துவிச்சக்கர
வண்டி ஒழுங்கை



21

முன்னால் துவிச்சக்கர
வண்டி கடவை



22

மந்தை அல்லது விலங்கு
முன்னால் பாதையைக்
கடக்கக் கூடும்



23

ஓடத்துறை
ஒன்றிலுள்ள வீதி
முன்னால்




24

முன்னால் நிறுத்து



25

முன்னால் வழி
விடவும்



26

முன்னால் சுற்றுவளைவு



27

முன்னால்
ஒளிச்சமிக்ஞைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



28



29



30

ஆபத்தான சரிவு
முன்னால்

ஆபத்தான ஏற்றம்
முன்னால்

வழுக்கும் பாதை
முன்னால்



31



32



33

கற்பாறைகள் விழும்
இடம் முன்னால்

முன்னால் பாதசாரிகள்
கடவை

முன்னால் பிள்ளைகள்
கடவை



34

முன்னால் பாதை வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குல விளக்காய் குடும்ப விருட்சமாய் எம்மைத் தாங்கி நின்ற அன்புத்தெய்வம் 15.02.2010 அன்று நாம் கலங்கி நிற்க எம்மைப் பிரிந்து இறைபதம் சேர்ந்த அந்த நாளில் எமக்கு ஆறுதல் அளித்து எம் துயரில் பங்குகொண்டது மட்டுமன்றி முன்னின்று உதவி செய்து மரணக்கிரியைகளிலும் இறுதியாத்திரையிலும் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து எம் துயரைப் பகிரிந்து கொண்டவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் அனுதாப கண்ணீர் அஞ்சலி உரைகளை வழங்கிய அன்பான கல்விச் சமூகத்தினருக்கும் துக்கத்தைப் பகிர்ந்து கொண்ட வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கும் தம்பசிட்டி அ.த.க.பா அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் கணிதநிலைய மாணவர்களுக்கும் சாயிகல்வி நிலைய மாணவர்களுக்கும் மற்றும் சபிண்டீகரணக் கிரியைகளை நடாத்திய ஆச்சாரியப் பெருந்தகைகளுக்கும் அந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர்,அயலவர்,நண்பர்கள் யாவருக்கும் இம்மலரை ஆக்கியயோன்,அச்சமைத்தோர் அனைவருக்கும் எம் இதயம் நெகிழும் இனிய நன்றிகளைத்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*"மோட்டஞ்சீமா"*
*அல்வாய்.*



*இங்ஙனம்,*
*மனைவி,பிள்ளைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வம்சவி**

வல்லிபுரம் + பரிபூரணம்

இராசரத்தினம்

செல்வரத்தினம்


* தர்மரத்தினம் (ஆசிரியர்)

இலட்சுமிய (பிரான்ஸ்)

பாலகிருஸ்ணன் (லண்டன்)


சாயினி (வடஇந்து மகளிர் கல்லூரி A/L - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org